
# 3 வீட்டில் சைவம்

நாம் அன்றாட வாழ்க்கையில் பல சைவப் பழக்க வழக்கங்களைக் கடைப் பிடிக்கின்றோம். அவற்றில் வீட்டில் கடைப்பிடிக்கும் சைவப் பழக்க வழக்கங்கள் சரியான முறையில் பயிற்சியுடன் கூடியதாக அமைய வேண்டும். அப்போதுதான் கோயில், பாடசாலை போன்ற பொது இடங்களிலும் நற்பண்பு உள்ளவர்களாக நாம் விளங்க முடியும்.

வீட்டில் அன்றாடம் கடைப்பிடிக்கக்கூடிய சைவப் பழக்க வழக்கங்கள் பற்றி முதலில் அறிந்து கொள்ளுவோம். விபூதி தரித்தல், விளக்கேற்றுதல், கடவுளை வணங்குதல் என்பன அவற்றுட் சிலவாகும்.

தினமும் காலையில் நீராடி, திருநீறு தரித்து, சுவாமி அறையில் பூவும் நீரும் வைத்து, விளக்கேற்றி, தூப தீபம் காட்டி, தோத்திரம் ஓதி கடவுளை வழிபடுதல் நல்ல பழக்கமாகும். மாலையிலும் முகம், கை, கால்கள் என்பவற்றைக் கழுவிய பின் கடவுளை வழிபடுதல் வேண்டும்.



வெள்ளிக்கிழமை தோறும் மாலை வேளைகளில் வீட்டிலுள்ள அனைவரும் ஒன்றிணைந்து, வழிபடுதல் வேண்டும். அவ்வேளையில் பஞ்சபுராணம் ஓதுதல் கூட்டுப் பிரார்த்தனை செய்தல் என்பவற்றை மேற்கொள்ளுதல் நன்று.



வெள்ளிக்கிழமை, தைப்பொங்கல் புதுவருடப்பிறப்பு மற்றும் விரத நாட்களிலும் நாம் கடைப்பிடிக்க வேண்டிய சைவப் பழக்க வழக்கங்கள் பல உள்ளன. அவ்வகையில் வீட்டையும் சுற்றாடலையும் சுத்தம் செய்தல், புனிதம் பேணுதல், இறை வழிபாடு செய்தல், பிரார்த்தனை செய்தல் என்பவற்றைச் செய்ய வேண்டும். பண்டிகை நாட்களில் மேற்கூறியவற்றுடன் கோலம் போடுதல், நிறைகுடம் வைத்தல், மாவிலை தோரணம் கட்டுதல் முதலானவையும் இடம்பெறும். இச் செயல்கள் வீட்டிற்குத் தெய்வீகப் பொலிவையும் நமக்குக் காரிய சித்தியையும் ஏற்படுத்தும்.

மேலும், இத்தகையை சைவப் பழக்கவழக்கங்கள் தொடர்ச்சியாகப் பேணப்பட வேண்டியவை ஆகும். அதற்காக, நாம் முதலில் வீட்டையும் வீட்டுச் சூழலையும் புனிதமாக வைத்திருப்போம். அவ்வாறே, விசேட தினங்களின் போது சமயச் செயற்பாடுகளில் ஈடுபடுவோம். அவற்றை எமது இளைய சந்ததியினருக்கும் பயிற்றுவிப்போம்.

**‘காலையும் மாலையும் கடவுளை வணங்கு’**

## பயிற்சிகள்

**01. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. நீங்கள் அன்றாடம் வீட்டில் கடைப்பிடிக்கும் சமயப் பழக்க வழக்கங்கள் ஐந்தினைக் குறிப்பிடுக.
2. விசேட தினங்களின்போது வீட்டில் பின்பற்றக்கூடிய சமயப் பழக்க வழக்கங்கள் நான்கினைத் தருக.
3. சரியான வகையில் சமயப் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிப்பதனால் பெறக்கூடிய நன்மைகளைக் குறிப்பிடுக.

**02. பின்வரும் செயற்பாடுகளை வகுப்பறையில் செய்து காட்டுக.**

அ. நிறைகுடம் வைத்தல்

ஆ. தோரணம் கட்டுதல்

இ. மாவிலை கட்டுதல்

ஈ. கோலம் போடுதல்

## செயற்பாடு

1. நீங்கள் சித்திரைப் புதுவருடப்பிறப்பின் போது வீட்டில் பின்பற்றிய சமயப் பழக்க வழக்கங்களைக் குறிப்பிடுக.

### பாடச்சுருக்கம்

- வீட்டில் சைவ சமயப் பழக்க வழக்கங்களை அன்றாடமும் விசேட தினங்களிலும் பின்பற்றுகின்றோம்.
- சமயப் பழக்க வழக்கங்களை பின்பற்றுவதனால் பல நன்மைகள் கிடைக்கும்.
- சமயப் பழக்க வழக்கங்கள் தொடர்ச்சியாகப் பேணப்பட வேண்டியவை ஆகும்.